# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் அக்டோபர் திங்கள் 29–ம் நாள் திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண் : 1**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பணிபுரிந்து வரும் கீழ்கண்ட துப்புரவு பணியாளர் நான்கு பேர் பணியிடம் அனுமதி 31.12.2007–ல் முடிவடைவதால் 01.01.2008 முதல் 31.12.2008 முடிய நீடித்து வைத்துக் கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

1) திரு.எம்.சந்திரசேகர்
2) திரு.வ. ராஜ குமார்
3) திரு.ஆ.மணிகண்டன்
4) திரு.ஆர். ராஜ குமார்

**அ.குறிப்பு :** இப்பணியிடத்தை 01.01.2007 முதல் 31.12.2007 முடிய ஓராண்டு காலம் நீடித்து வைத்துக் கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.6624/2007/ஜே3 நாள் 01.08.2007 –ல் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே மேலும் 01.01.2008 முதல் 31.12.2008 வரை ஓராண்டிற்கு நீடித்துக் கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.350.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 2**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இருந்து வரும் ஒரு மினி லாறி ஓட்டுனர் பணியிடத்துக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.52675/2006/ஜே3 நாள் 15.11.2006–ல் வழங்கப்பட்ட அனுமதி 30.09.2007–ல் முடிவடைவதால் மேலும் 01.10.2007 முதல் ஓராண்டு நீடித்துக் கொள்ள அனுமதித்து பிரேரணைகள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : சுனாமியால் பாதிக்கப்பட்ட குளச்சல் நகருக்கு நகரின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு பொது சுகாதார பணிகளுக்கு இப்பணியிடம் அவசியம் தேவைப்படுவதால் 01.10.2007 முதல் மேலும் ஓராண்டிற்கு நீடிக்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1202/94/சி1)

**தீர்மான எண்.351.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 3**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இருந்து வரும் ஒரு மினி லாறி ஓட்டுனர் பணியிடத்துக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.52675/2006/ஜே3 நாள் 15.11.2006–ல் வழங்கப்பட்ட அனுமதி 30.09.2007–ல் முடிவடைவதால் மேலும் 01.10.2007 முதல் ஓராண்டு நீடித்துக் கொள்ள அனுமதித்து பிரேரணைகள் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்கவும் மன்றத்தின் ஒப்புமல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** சுனாமியால் பாதிக்கப்பட்ட குளச்சல் நகருக்கு நகரின் சுகாதார நலனை கருத்தில் கொண்டு பொது சுகாதார பணிகளுக்கு இப்பணியிடம் அவசியம் தேவைப்படுவதால் 01.10.2007 முதல் மேலும் ஓராண்டிற்கு நீடிக்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.1203/94/சி1)

**தீர்மான எண்.352.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 4**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் மினிலாறி TN-74 Z-8931-க்கு தகுதி சான்று 16.11.2007–ல் முடிவடைவதால் தகுதி சான்று பெறுவதற்கும், பழுதுகள் நீக்கம் செய்யவும் உத்தேச செலவு ரூ. 18,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண்.353.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 5**

குளச்சல் நகராட்சி மினி லாறி TN-74-5507 -க்கு 05.10.2007–ல் தகுதி சான்றிதழ் பெற வேண்டி பழுதுகள் நீக்கம் செய்ய உத்தேச செலவு ரூ. 24,000/–க்கு நகர்மன்றத் தீர்மானம் எண். நாள் 20.09.2007–ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் 27.09.2007–ல் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| | | Spare Parts | Labour | Total |
|---|---|---|---|---|
| 1 | மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் | :ரு.16,715 | ரூ. 7,225 | ரூ.23,950 |
| 2 | கே.எஸ்.எஸ்.எஸ்.ஆட்டோ மொபைல்ஸ், நாகர்கோவில் | ரூ.17,580 | ரூ.8,655 | ரூ.26,235 |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி குறைவானதை எற்கவும், பொது நிதியிலிருந்து செலவு செய்யப்படவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மணி மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணிகளை மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.354.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 6**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.41466/07/குவ2 நாள் 03.10.2007 குளச்சல் நகராட்சியின் குடிநீர் குழாய் இணைப்புகளுக்கான குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகையினை கீழ்க்கண்டவாறு வசூல் செய்யவும், குழாய் இணைப்பினை முறைப்படுத்தவும், குடிநீர் விநியோக துணை விதிகளில் உரிய திருத்தம் செய்து நமைுறைப்படுத்தவும் ஆணை வழங்கியுள்ளது. விபரம் மன்றத்தின் பார்வைக்கு.

| வ.எண். | தன்மை | குறைந்தபட்ச கட்டணம் | குடிநீர் வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | வீட்டு இணைப்பிற்கு 1000 லிட்டருக்கு ரூ.5/– வீதம் குறைந்தபட்சம் | ரூ. 50/– | ரூ. 2000/– |
| 2 | வீட்டு உபயோகமில்லாத (தொழிலகங்கள்) இணைப்புகளுக்கு 1000 லிட்டருக்கு ரூ. 12/– வீதம் குறைந்தபட்சம். | ரூ. 120/– | ரூ. 5000/– |
| 3 | வணிக நிறுவனங்களுக்கு 1000 லிட்டருக்கு ரூ.18/– வீதம் குறைந்தபட்சம் | ரூ. 180/– | ரூ. 7000/– |

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.355.** பதிவு செய்யப்பட்டது.

**பொருள் எண். 7**

இந்நகராட்சி ஒப்பந்தக்காரர் திரு. செல்லத்துரை 2000–2001–ம் ஆண்டில் சாம்பசிவபுரத்தில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி செய்ததில் வைப்புத் தொகை ரூ. 4950/– பில்லில் பிடித்தம் செய்யப்பட்டு காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ளது. இப்பணி தொடர்பாக தணிக்கைத்தடை ஏதும் இல்லை. எனவே மேற்படி தொகையினை திரும்ப வழங்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.356.** அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 8**

இந்நகராட்சி ஒப்பந்தக்காரர் திரு. செல்லத்துரை 2000–2001–ம் ஆண்டில் துறைமுகத்தெரு பிளாக் எண். 17–ல் சிமெண்ட் தளம் அமைக்கும் பணி செய்ததில் வைப்புத் தொகை ரூ. 6050/– பில்லில் பிடித்தம் செய்யப்பட்டு காலங்கடந்த வைப்பு தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ளது. மேலும் இப்பணி தொடர்பாக தணிக்கைத்தடை ஏதும் இல்லை. எனவே மேற்படி தொகையினை திரு. செல்லத்துரை, ஒப்பந்தக்காரருக்கு திரும்ப வழங்க மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.357.** அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 9**

குளச்சல் நகராட்சிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.28474/2006/UPA-2 நாள் 08.09.2006. –ன்படி சொர்ண ஜெயந்தி திட்டம் 2006–07–ம் ஆண்டிற்கு A & OE பிரிவிற்கு மத்திய அரசு ரூ. 22,500/– மாநில அரசு நிதி ரூ. 7500/– மொத்தம் ரூ. 30,000/–ம், சமுதாய அமைப்பு பிரிவிற்கு மத்திய அரசு நிதி ரூ. 26,250/–, மாநில அரசு நிதி ரூ. 8750/– மொத்தம் ரூ. 35,000/– வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட A & OE தொகை ரூ. 30,000/– உடன் சமுதாய அமைப்பு பிரிவு ரூ. 35,000/– லிருந்து நிர்வாக செலவு 8% தொகை ரூ. 2800/–ம் சேர்த்து ரூ.32,800/–க்கு மன்ற முன் அனுமதி பெற்று காதி கிராமோதையா பவன், நாகர்கோவிலிடமிருந்து 4 பீரோ, 3 மேஜைகள் ரூ.32,900/–க்கு வாங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகை ரூ. 32,800/–மேற்கண்ட திட்ட நிதியிலிருந்து செலவிடுவதற்கும், கூடுதலாக செலவு செய்த தொகை ரூ. 100/– ஐ நகராட்சியின் பொது நிதியிலிருந்து செலவிடுவதற்கும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.358.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண் : 10**

2007–2008–ம் ஆண்டிற்கு இந்நகராட்சியில் தெருவிளக்குகள் பராமரிப்பிற்கு தேவையான பொருட்கள் வாங்கிட உத்தேச செலவு ரூ. 4.50 லட்சத்திற்கு நகர்மன்றம் தனது தீர்மானம் எண். 169 நாடள 20.04.2007–ல் ஒப்புதலளித்துள்ளது. அதன்பேரில், முதல் கட்டமாக மூன்று மாதங்களுக்கு தேவையான உதிரி பொருட்கள் வாங்குவதற்கு 11.03.2007–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. அதன் விபரம் பின்வருமாறு

| :வ.எண். | பொருளின் பெயர் | தேவைப்படும் மொத்த எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி கோரிய நிறுவனத்தின் பெயர் | | |
|---|---|---|---|---|---|
| | | | ஜொதிவேல் 165ஹை ரோடு திருநெல்வேலி | கங்கா எலக்ட்ரிக்கல்ஸ் திருநெல்வேலி | இண்டியன் எஜென்சிஸ் 267 கோர்ட்ரோடு நாகர்கோவில் |
| | | | ( ஒரு பொருளின் விலை) | | |
| 1 | குழல் விளக்கு 40 W | 2000 எண்ணம் | 45/– | 44/– | 44/– |
| 2 | குழல் விளக்கு சோக் 40 W | 850 “ | 150/– | 145/– | 125/– |
| 3 | ஸ்டார்ட்டர் 40 W | 2000 “ | 10/– | 9/– | 8/– |
| 4 | சைடு ஹோல்டர் | 4000 “ | 10/– | 9/– | 6/– |
| 5 | சோடியம் ஆவி விளக்கு 250 W | 80 “ | 700/– | 640/– | 630/– |
| 6 | சோடியம் சோக் 250 W | 50 “ | 1300/– | 1230/– | 1300/– |
| 7 | சோடியம் இக்னேட்டர் 250 W | 75 “ | 240/– | 200/– | 165/– |
| 8 | சோடியம் சைடு கோல்டர் | 50 “ | 100/– | 95/– | 75/– |
| 9 | பி.வி.சி. டேப் ரோல் | 30 “ | 11/– | 10/– | 9.50 |
| 10 | 33 MFD கண்டென்சர் | 75 “ | 300/– | 295/– | 375/– |
| 11 | 42 MFD கண்டென்சர் | 6 “ | 630/– | 420/– | 425/– |
| 12 | குழல் விளக்கு பிட்டிங்ஸ் | 50 “ | 750/– | 740/– | 1150/– |
| 13 | 400 W மெட்டல் ஹலோஜன் பல்ப் | 6 “ | 1850/– | 1840/– | 1225/– |
| 14 | 600 W மெட்டல் ஹலோஜன் சோக் | 6 “ | 1700/– | 1650/– | 1590/– |

இதில் (1) கங்கா எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனம் , வ.எண். 1, 6, 10, 11, 12 ஆகிய நான்கு பொருட்களுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளது.

(2) இண்டியன் ஏஜென்சிஸ் நிறுவனம் வ.எண். 2, 3, 4, 5, 7, 8, 9, 13 மற்றும் 14 ஆகிய 9 பொருட்களுக்கும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளது.

தெருவிளக்கு உதிரி பொருட்கள் தற்போது இருப்பில் இல்லாததால் வ.எண். 1, 6, 10, 11 மற்றும் 12 ஆகிய பொருட்களை கங்கா எலக்ட்ரிக்கல்ஸ் நிறுவனத்திற்கும்,, 2, 3, 4, 5, 7, 8, 9, 13 மற்றும் 14 ஆகிய பொருட்களுக்கு இண்டியன் ஏஜென்சி நிறுவனத்திற்கும், பொது நலன் கருதியும் அவசர அவசியத்தை முன்னிட்டும், வினியோக உத்தரவினை நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதியுடன் வழங்கியதற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.359.** அலுவலகக்குறிப்பினை ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண்.11**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் IDSMT திட்டத்தின்கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாக கட்டிடங்கள் (கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் மற்றும் கவியரச கண்ணதாசன் வணிக வளாகம்) மூன்றாம் முறையாக 03.10.2007 அன்று மறு ஏலம் விடப்பட்டதில் உச்ச ஏலக் கேள்வி விபரம் :

| குத்தகை கடை எண். கலைஞர் கருணாநிதி வணிக வளாகம் | உச்ச ஏலக்கேள்விதாரர் பெயர் | உச்ச ஏலக்கேள்வி |
|---|---|---|
| 15 | திரு.எம். அப்துல் கரீம் | 1510/– |
| 17 | திரு. எ. செய்யதலி | 1505/– |
| 18 | திரு.T.ஜெஸ்டின் செல்வகுமார் | 1575/– |
| 19 | திரு.T.ஜெஸ்டின் செல்வகுமார் | 1560/– |
| 20 | திரு.எம். அப்துல் கரீம் | 1510/– |
| 22 | திரு. L. முகம்மது தாசிம் | 1515/– |
| **கவியரசு கண்ணதாசன்** | | |
| 1 | திரு. பொன்னுமணி | 1210/– |
| 2 | திரு. பொன்னுமணி | 1220/– |
| 3 | திரு.எம். வேலப்பன் | 1225/– |
| 8 | திரு.எம்.பீர்முகம்மது | 1230/– |
| 9 | திரு.நைனா முகம்மது | 1235/– |
| 10 | திரு.வி. சேகர் | 1235/– |
| 11 | திரு.வி. சேகர் | 1225/– |
| 13 | திருமதி.எம். ஐநேசியாள் | 1230/– |
| 14 | திரு.G.செந்தில் குமார் | 1240/– |
| 15 | திரு. எஸ்.முருகேசன் | 1250/– |
| 16 | திரு.பி.ஜாண் நிக்சன் | 1250/– |
| 26 | திரு.எ. நாசர் | 785/– |
| 27 | திரு.எ.நாசர் | 800/– |

மேற்கண்ட கடைதாரார்களுக்கு நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகராட்சி மன்றத் தலைவர் அர்களின் முன் அனுமதி பெற்று உரிமம் உத்தரவு வழங்கியமைக்கு ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மேற்கண்ட மறு ஏலம் மூன்றாவது முறையாக கேட்கப்பட்டதாலும் மண்டல செயற்பொறியாளர், திருநெல்வேலி அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பொதுப்பணித் துறை விலை விகிதப்படியான தொகையைவிட கூடுதலாக இருப்பதாலும் கடைகள் ஏலம் எடுக்காமல் காலியாக இருந்து நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்படாமல் இருந்திடவும் பொதுப்பணித்துறையால் நிர்ணயிக்கப்பட்ட ஏலத்தொகைக்கும் கூடுதலாக இருப்பதாலும் மேற்கண்ட ஏலத்தை ஏற்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

**தீர்மான எண்.360.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

தலைவர்,
குளச்சல் நகராட்சி மன்றம்.

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 29.10.2007–ம் தேதி திங்கள்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்றது.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**பொருள் எண். 1**

இந்நகராட்சி வாகனமான ஜPப் எண். TN.74 V 3530–ற்கு இன்சூரன்ஸ் கட்டணம் ரூ. 11317/– செலுத்தக் கேட்டு இன்சூரன்ஸ் நிறுவனத்திடமிருந்து கடிதம் வரப்பெற்றதன் அடிப்படையில் அவசரத்தை முன்னிட்டு நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி தொகை செலுத்தியமைக்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.361.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 2**

இந்நகராட்சிக்கு சொந்தமான பெருந்தலைவர் காமராசர் பேருந்து நிலையத்தில் புதிதாக கட்டப்பட்ட கடைகளின் ( க.எண். 34, 35, 36, 37, 38 ) குத்தகைதாரர் வியாபார வசதிக்காக கடை இடைச் சுவரினை நீக்கம் செய்ய அனுமதி வழங்க கேட்டும், அதற்கான செலவுத் தொகை ரூ. 36,000/– ஐ நகராட்சி கருவூலத்தில் செலுத்துவதற்கும் அனுமதி கேட்டதன் அடிப்படையில் அவசர அவசியத்தின்பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று இடைச் சுவரினை நீக்கம் செய்ய அனுமதியளித்தும் அதற்கான செலவுத் தொகை ரூ. 36,000/– கருவூலத்தில் செலுத்தியமைக்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.362.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ள ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 3**

இந்நகராட்சிக்கு புதிதாக வாங்கப்பட்ட மினி லாறி TATA 407 பதிவு செய்வது தொடர்பாக நகர்மன்றத் தீர்மானம் எண். 235 நாள் 15.06.2007–ன்படி ரூ. 7350/– செலவு செய்யப்பட்டது. தற்போது கூடுதல் செலவினமாக ரூ. 4170/– செலவாகியுள்ளது. எனவே அவசர அவசியத்தின் பேரில் மேற்கண்ட தொகை ரூ. 4170/– னை நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று சம்மந்தப்பட்ட வாகனத்தை R.T.O. அலுவலக;ம மூலம் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : புதிய TATA 407 லாறியை பதிவு செய்திட மேற்கண்ட மொத்த செலவினம் ரூ.11,520/– மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.363.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 4**

குளச்சல் நகராட்சி சொந்தமான ஜPப் TN.74 V 3530 வாகனத்தில் திடீரென கீயர் மற்றும் கிளட்சு பழுது ஏற்பட்டதால் இயங்காமல் நின்று விட்டது. நிர்வாக நலன் கருதி மேற்படி பழுதினை உடன் சரி செய்ய வேண்டியுள்ளதால் Mahendra Service Station அல்லது இதர Service நிலையங்களிலிருந்து உடனடியாக ஒப்பந்தப்புள்ளிகள் பெறும் வகையிலும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.6000/–க்கும் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.364.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 5**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான பெருந்தலைவர் காமராசர் பேருந்து நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கடைகளுக்கு ( க.எண். 34, 35, 36, 37, 38 ) மின்வசதி செய்ய ஏதுவாக மின்சார இணைப்பு கட்டணம் கடைக்கு ரு.1550/– வீதம் 5 கடைகளுக்கு ரூ. 7750/– ஐ அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தியமைக்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.365.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 6**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான பெருந்தலைவர் காமராசர் பேருந்து நிலைய வணிக வளாகத்தில் அமைந்துள்ள கடை எண். 10–ல் குத்தகைதாரர் திரு.நூகுக்கண் என்பவரின் குத்தகை நிலுவை தொடர்பான வழக்கில் (வ.எ.63/2003) நகராட்சி சார்பில் ஆஜராகி நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு பெறப்பட்ட வகையில் வழக்கு செலவுத் தொகை ரூ. 2225/– வழங்க கேட்டு இந்நகராட்சி வழக்கறிஞர் (திரு. மரிய அற்புதம்) கோரியுள்ளார். எனவே மேற்படி செலவுத் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.366.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 7**

குளச்சல் நகராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கொட்டில்பாடு, ஆசாத்நகர், சிங்காரவேலன் காலனி, பெரியநாயகி காலனி ஆகிய பகுதிகளிலுள்ள மக்களுக்கு ஆசாத் நகரில் எப்பிக்கோர் காலனி மற்றும தோழமை காலனி ஆகிய பகுதிகளில் நிரந்தர குடியிருப்பு கட்டப்பட்டுள்ளது. அந்த பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் மூலம் ரூ. 4.33 லட்சம் திட்ட மதிப்பீட்டில் 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஆழ்துளை கிணறு மற்றும் பி.வி.சி. குழாய்கள் அமைக்கப்பட்டு நகராட்சியிடம் ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார்கள். அதன் விபரம் வருமாறு.

1) 30 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்டமேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி – 1 எண்ணம்
2) 150 mm dia ஆழ்துளை கிணறு 64.5 மீட்டர் ஆழம் – 1 எண்ணம்.
3) 3 H.P. நீர்மூழ்கி மோட்டார் 90 lpm x 60 m head – 1 எண்ணம்
4) மின் இறைப்பான் அறை 1.50 x 0.70 x 1.80 m - 1 எண்ணம்
5) 75 mm dia பி.வி.சி. பிரதான குழாய் 4 KSC – 1285 மீட்டர்
6) 63 mm OD பி,வி,சி, பிரதான குழாய் 4 KSC – 572,70 மட்டர்
7) Sluice Valve 50 mm dia – 4 எண்ணம்
8) Scow valve 50 mm dia – 1 எண்ணம்
9) 63 mm OD பிவிசி பகிர்மானக் குழாய் 4 KSC (சிங்காரவேலர் காலனி, ஆசாத் நகர்–2 பெரியநாயகி காலனி) – 788 மீட்டர்
10) 63 mm OD பிவிசி பகிர்மான குழாய் 4 KSC (கொட்டில்பாடு லேஅவுட் 2– சாம்பசிவபுரம்) – 413.10 மீட்டர்
11) பொதுக்குழாய்கள் – 8 எண்ணம்

மேற்கண்ட O.H.T., பகிர்மானக் குழாய் மற்றும் வால்வுகளை நகராட்சிக்கு சொந்தமாக்கிடவும், வருங்காலம் பராமரித்திடவும் ஏதுவாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.367.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 8**

உதவி பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நாகர்கோவில் அவர்களின் கடிதம் எண். எப். சுனாமி/AW3 /2006 நாள் 07.08.2006 கடிதத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஆசாத் நகரில் கேஎஸ்எஸ்எஸ் காலனி மற்றும் மாதா அமிர்தானந்தயி காலனி ஆகிய பகுதிகளில் கட்டப்பட்டுள்ள நிரந்தர குடியிருப்பு பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி மற்றும் குடிநீர் குழாய்களை நகராட்சியிடம் ஒப்படைப்பதாக தெரிவித்துள்ளார்கள். அவற்றின் விபரம் பின்வருமாறு.

திட்ட மதிப்பு ரூ. 9.97 லட்சம்.

1) ஆழ்துளை கிணறு ஆழம் 59 மீட்டர் – 1 எண்ணம்
2) மின் இறைப்பான் 3 H.P. – 1 எண்ணம்
3) மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி(6000 லிட்டர் கொள்ளளவு கொண்டது) உயரம் 7.5 மீட்டர் – 1 எண்ணம்
4) பொதுக் குழாய்கள் – 15 எண்ணம்
5) மின் இறைப்பான் அறை ( 1.05 m x 0.70 M x 1.8 M) – 1 எண்ணம்
6) 75 mm விட்டம் பிவிசி குழாய் 4 KSC – 520 மீட்டர்
7) 63mm விட்டம் பிவிசி குழாய் 4 KSC – 1935 மீட்டர்
8) 50mm விட்டம் G.M. Valve – 3 எண்ணம்

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்ட மேற்கண்ட 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட O.H.T. (ஆசாத் நகர்) மற்றும் பகிர்மானக் குழாய்கள், வால்வுகள் முதலியவற்றை நகராட்சிக்கு சொந்தமாக்கிடவும், வருங்கால பராமரிப்பிற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.368.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 9**

குளச்சல் நகராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கொட்டில்பாடு மக்களுக்காக ஆசாத் நகரில் நிரந்தர குடியிருப்பு கட்டப்பட்டுள்ளது. அந்தப் பகுதிகளில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் கழிவுநீர் செல்வதற்கு பாதாள சாக்கடை திட்டத்தின் மூலம் குழாய் அமைக்கப்பட்டு நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்வதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் பிரேரணை சமர்ப்பித்துள்ளது. மேற்படி திட்டம் சரியாக இயங்காத காரணத்தால் திட்டத்தில் technicalஆக பிரச்சனை உள்ளதாலும் சேகரிக்கப்படும் கழிவு நீர் வெளியேற்றத்திற்கு வாய்ப்பு இல்லாத அளவிற்கு disposal பகுதியில் நீர் மட்டம் உயர்வாக உள்ளதாலும் கழிவு நீர் reverse-ல் செல்வதாலும் வீடுகளில் கழிவு நீர் கொப்பளிக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வப்போது உறிஞ்சு லாறிகள் மூலம் சேகரிப்பு கழிவு நீர் வெளியேற்றப்படுவதை தவிர வேறு வழியில்லை. விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**அ.குறிப்பு** : மன்றத்தின் முடிவிற்கு.

**தீர்மான எண்.369.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தில் கடை எண்.8, 9, 25, 26 ஆகிய கடைகளை வாடகைக்கு எடுத்துள்ள குத்தகைதாரர் திருமதி.ஆர்.தேன்மொழி என்பவர் வியாபார அபிவிருத்திக்காக மேற்படி கடைகளுக்கு இடையேயான இடைச் சுவரினை நீக்கம் செய்ய கேட்டு விண்ணப்பித்துள்ளார். அவசர அவசியத்தின் பேரில் நகராட்சி மன்றத் தலைவர் அவர்களின் முன்அனுமதியுடன் பணி மேற்கொண்டமைக்கும், அதற்கான செலவினத் தொகை ரூ. 33,500/– ஐ நகராட்சி கருவூலத்தில் செலுத்தியமைக்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.370.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 11**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான கவியரசு கண்ணதாசன் வணிக வளாகத்தில் கடை எண். 10, 11 ஆகியவற்றின் இடைச்சுவரினை நீக்கம் செய்யக் கேட்டு குத்தகைதாரர் திரு. சேகர் என்பவர் விண்ணப்பித்துள்ளார். எனவே மேற்படி இடைச்சுவரினை நீக்கம் செய்வதற்கும், அதற்கான செலவுத் தொகை ரூ. 8,200/–ஐ நகராட்சி கருவூலத்தில் செலுத்துவதற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.371.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 12**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட அழகனார்கோட்டைவிளை பகுதியில் கதவு எண். 26/21A கட்டிடத்தில் குடிநீர் நிலுவை செலுத்தக் கோரி நகராட்சி சார்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்கு எதிராக திருமதி. சுகுமாரி பிரதீபா, க/பெ. பொன்னுசுவாமி என்பவரால் தொடரப்பட்ட வழக்கில் (வழக்கு எண்.298/2004 ) நகராட்சி சார்பாக அஜராகி நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு பெறப்பட்ட வகையில் வழக்கு செலவினத் தொகை ரூ. 2225/– ஐ நகராட்சி வழக்கறிஞர் திரு. மரிய அற்புதம் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.372.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 13**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து நிலைய கட்டிடம் கட்டி சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாகின்றது. அதிலுள்ள மேல் தள ஓடுகள் பழுதடைந்து கடைகளில் நீர் கசிவு ஏற்படுகின்றது. இதனால் கடைகளில் உள்ள பொருட்களுக்கு சேதம் ஏற்படுகிறது. மேலும் அதனை சரி செய்ய உத்தேச செலவு தொகை ரூ.1,00,000/– ஆகும். இதனால் நகராட்சிக்கு செலவு ஏற்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு மேல்தளத்தில் ஒரு கடையை கட்டினால் நீர் கசிவு நிறுத்தப்படுவதுடன் அதனால் நகராட்சிக்கு ஒரு நிரந்தர வருமானம் ஏற்படும். ஆகவே முதல் தளத்தில் ஒரு கடையினை நகர் மற்றும் ஊரகமைப்புத்துறையின் ஒப்புதலுடன் கட்டுவதற்கும் இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.4,90,000/–க்கும் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.373.**

**பொருள் எண். 14**

குளச்சல் நகராட்சிக்கு சொந்தமான இந்திரா காலனி பகுதியில் குப்பைகள் கொட்டும் இடத்தில் பட்டுப்போன 10 தென்னை மரங்களை 15.10.2007–ல் ஏலம் கோரப்பட்டதில் ஏலம் எடுக்க முன்வராததால் 26.10.2007 அன்று மறு ஏலம் விடப்பட்டதில் உயர்ந்தபட்ச ஏலக் கேள்வி மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.

| | | |
|---|---|---|
| 1 | திரு.எஸ். அம்புறோஸ் | ரூ. 2100/– |
| 2 | திரு.ஜாண் ரெக்ஸிலின் ஜோஸ் | ரூ. 2050/– |

திரு.எஸ்.அம்புறோஸ் என்பவரின் உயர்ந்த ஏலக்கேள்வி ரு. 2100/– கேட்டுள்ளார்.

**அ.குறிப்பு** : உயர்ந்த ஏலக்கேள்வி ரூ. 2100/– கேட்டுள்ள திரு.எஸ்.அம்புறோஸ் என்பவரின் ஏலக் கேள்வியினை மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

**தீர்மான எண்.374.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 15**

இந்நகராட்சிக்குட்பட்ட இடத்தில் சுனாமியால் பாதித்த பகுதிகளில் சுனாமி மறுவாழ்வு திட்டத்தின்கீழ் வீடு இழந்தவர்களுக்கு குடியிருப்புகள் கட்டி கொடுக்க கீழ்கண்ட விபரப்படி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1 | கொட்டில்பாடு | நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், திருநெல்வேலி அவர்களின் ம.பி.வ(திலி) எண். 55/2006. |
| 2 | சிங்காரவேலன் காலனி | நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், திருநெல்வேலி அவர்களின் ம.பி.வ (திலி) எண். 67/2006. |
| 3 | கொட்டில்பாடு | நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், திருநெல்வேலி அவர்களின் ம.பி.வ (திலி) எண். 56/2006. |
| 4 | ஆசாத் நகர் | நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், திருநெல்வேலி அவர்களின் ம.பி.வ (திலி) எண். 52/2006. |
| 5 | ஆசாத் நகர் | நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், திருநெல்வேலி அவர்களின் ம.பி.வ (திலி) எண். 46/2006. |

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.கே/43083/2006 நாள் 07.08.2006 கடிதத்தின்படி மேற்கண்ட இடங்களை குளச்சல் நகராட்சி வசம் ஒப்படைத்து பராமரிப்பு செய்திட உத்தரவு வழங்கியுள்ளார். இதன்படி நகராட்சி நில அளவையர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் இடத்தினை பார்வையிட்டு கீழ்க்ண்ட விபரப்படி அலுவலக குறிப்பு வழங்கியுள்ளார்கள். இதன் விபரம் வருமாறு.

| இடத்தின் பெயர்<br>நகர புல எண் | இடத்தின் தன்மை | ஏக்கர் சென்ட் |
|---|---|---|
| கொட்டில்பாடு<br>T.S.No. C2/3-13A | வீடுகட்டப்பட்டுள்ள இடம்<br>பொது காலி இடம்<br>கடை<br>ரோடு | 0. 39. 82<br>0. 31. 66<br>0. 02 . 80<br>0. 29. 17 |
| | | **1. 01. 58** |
| சிங்காரவேலன் காலனி<br>TSNo. C2/5A2<br>5B<br>3/13 B | வீடுகட்டப்பட்டுள்ள இடம்<br>பொது காலி இடம்<br>கடை<br>ரோடு | 1. 85. 43<br>0. 10. 89<br>0. 02. 80<br>0. 97 . 83 |
| | | 2. 96. 95 |
| கொட்டில்பாடு<br>TSNo. C2/4-8B | வீடுகட்டப்பட்டுள்ள இடம்<br>பொது காலி இடம்<br>கடை<br>பார்க்<br>ரோடு | 1. 70. 12<br>0. 19. 00<br>0. 03. .53<br>0. 02. 80<br>0. 53. 35 |
| | | **2. 47. 00** |
| ஆசாத்நகர்<br>C2/2-4B | வீடுகட்டப்பட்டுள்ள இடம்<br>ரோடு | 1. 11. 00<br>0. 05.12 |
| | | 0. 16. 12 |
| ஆசாத்நகர்<br>C2/2B, 2C | வீடுகட்டப்பட்டுள்ள இடம்<br>பார்க்<br>பொது இடம்<br>கடை<br>ரோடு | 0. 37. 570<br>0. 04. 500<br>0. 01 . 500<br>0. 00.790<br>0. 15. 250 |
| | | **0. 59. 610** |

மேற்கண்ட இடங்களில் உள்ள பூங்கா அமைப்பதற்கான இடம், கடை கட்டுவதற்கான இடம், பொது இடம் மற்றும் சாலை ஆகியவற்றை நகராட்சி சொத்துக்களாக மாற்றிட மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.375.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண். 16**

இந்நகராட்சி உள்ளூர் திட்ட குழுமப் பகுதியில் 1975–ம் வருடத்திய உள்ளூர் திட்டக் குழுமங்கள் (அபிவித்தி கட்டணம்) வசூல் செய்தல் விதிகளில் 5 (1) மற்றும் 6 (1) திருத்தம் மேற்கொண்டு வெளியிடப்பட்ட அரசாணை எண். 396 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள் 12.09.1996–ன்படி அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படும் நிலங்களுக்கு அபிவிருத்தி கட்டணம் சதுர மீட்டருக்கு ரூ. 1/– வீதமும், கட்டிடங்களுக்கு அபிவிருத்தி கட்டணமாக சதுர மீட்டர் ஒன்றுக்கு ரூ. 2.50 –க்கும் நிர்ணயம் செய்யவும், அதன் அடிப்படையில் நில உபயோகம் மற்றும் கட்டிடங்கள் உபயோகம் மற்றும் நிகழ்வுகளின் போது வசூலிக்க ஒழுங்கு முறைப்படுத்தி நிர்ணயம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.376.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண்.17**

குளச்சல் நகரை பாரம்பரியமிக்க சுற்றுலா மையமாக மாற்றுவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித எண்.88404/06/வ2 நாள்.4.1.2007ல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நகரை அழகுபடுத்தும் பொருட்டு நகர்மன்ற தலைவரின் அறிவுறுத்தலின் பேரில் கீழ்கண்ட பணிகள் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடு செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | குளச்சல் பிரதான சாலையில் வி.கே.பி.பள்ளி முதல் காந்தி ஜங்சன் வரை உள்ள பகுதியில் மழைநீர் வடிகால் அமைத்து Stainless Steel கைபிடி மற்றும் டைல்ஸ் உடன் கூடிய நடைபாதை அமைப்பதற்கும் காந்தி ஜங்சன் முதல் பீச் ஜங்சன் வரை அமைக்கப்பட்டுள்ள நடைபாதையில் Stainless Steel கைபிடி மற்றும் டைல்ஸ் அமைப்பதற்கும் சோடியம் ஆவி விளக்குகள் அமைப்பதற்கும். | ரூ.190.00 லட்சம் |
| 2. | குளச்சல் பெருந்தலைவர் காமராசர் பேருந்து நிலையத்தின் வடக்கு பாகத்தில் அமைந்துள்ள காம்பவுண்ட் வளாகத்தினுள் கீழ்தளத்தில் வாகனம் நிறுத்தும் வசதியுடன் கூடிய கல்யாண மண்டபம் கட்டுதல். | ரூ.65.00 லட்சம் |
| 3. | டாக்டர் அம்பேத்கார் தினசரி சந்தையில் நவீன மீன் மார்க்கெட் கட்டுமானம் கட்டுதல் | ரூ.17.50 லட்சம் |
| 4. | கொட்டில் பாடு மற்றும் துறைமுக பாலம் இடையேயான கடலோரப்பகுதியில் பூங்கா அமைத்தல் | ரூ.4.00 லட்சம் |
| | **மொத்தம்** | **ரூ.276.50 லட்சம்** |

மேற்கண்ட பணிகளுக்கான திட்ட பிரேரணை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.377.** பொருளில் கொடுக்கப்பட்டுள்ள நான்கு திட்ட பிரேரணகளுடன் பெருந்தலைவர் காமராசர் பேருந்து நிலைய வணிக வளாகத்தில் முதல் மாடியில் சமுதாயக் கூடம் (Community Hall) கட்டுவதற்கு தேவையான திட்டமதிப்பீட்டுத்தொகை ரூ.43 லட்சம் கூடுதலாக சேர்த்திடவும் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண்.18**

குளச்சல் நகராட்சியில் ஐ.டி.எஸ்.எம்.டி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தில் உள்ள கடைகளை வாடகைக்கு விடுவதற்கு நான்கு முறை ஏலம் விடப்பட்டுள்ளது. இதில் முதல் தளத்திலுள்ள கடைகளை ஏலம் எடுக்க எவரும் முன்வரவில்லை. இந்நிலையில் BSNL நிறுவனம் தனது Customer Care Unit cum Cash Collection Centre அமைப்பதற்கு (B38/SDE Office, Colachel/2007/39 dated at Nagercoil 27.10.2007) என்ற கடிதம் மூலம் கடை எண்.60 முதல் 64 வரை மற்றும் கடை எண்.33 முதல் 37 வரையிலுள்ள 10 கடைகளையும் வாடகைக்கு கோரியுள்ளனர். மேலும் மேற்கண்ட கடைகளில் ஒன்றில் கழிப்பிடவசதி, மேலும் கடைகளை கதவு ஜன்னல் பொருத்தி அலுவலகமாக மாற்றி தருமாறும், கீழே ஒரு இடத்தில் வாகனங்களை நிறுத்துவதற்கு இடவசதியும் கோரியுள்ளனர். ஆகவே மேற்கண்ட கடைகளை BSNL நிறுவனத்திற்கு வாடகைக்கு விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதற்கும் சம்பந்தப்பட்ட கடைகளை அலுவலகமாக மாற்றிதர கோரும் மாற்றங்களை மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.378.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண்.19**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.வ2/59518/07(1) நாள்.19.10.2007ல் கன்னியாகுமரி மாவட்டம் குழந்தை தொழிலாளர் இல்லாத மாவட்டமாக அறிவிப்பதற்கு ஏதுவாக நகராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே, குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் குழந்தை தொழிலாளர்கள் எவரும் இல்லை என்கின்ற விபரத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு அனுப்பிட மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.379.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண்.20**

குளச்சல் நகராட்சிப்பகுதியில் 13 போர்களில் இருந்து 9 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் தண்ணீர் ஏற்றி நகராட்சியின் அனைத்து பகுதிகளுக்கும் தினமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதன்காரணமாக நகரில் பெரும்பாலான இடங்களில் பம்பிங் லைனிலும் சப்ளை லைனிலும் உடைப்பு ஏற்படுகிறது. அதன் விபரம் பின்வருமாறு.

1. மாதா காலனியில் பிளாட் எண்.48ன் அருகில் பொது குழாய் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
2. நரிக்கல்லில் பொது குழாய் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
3. பள்ளி முக்கில் 3'' சப்ளை லைனில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
4. பீச் டேங்கில் செல்லும் பம்பிங் மெயினில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
5. எலைட் ஹார்டுவேர் அருகில் சப்ளை லைனில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
6. ஈழக்கானிவிளை, முகைதீன்பள்ளி ஆகிய பகுதிகளில் 4'' sluice valve லீக் ஆகிறது.
7. பீச் டேங் செல்லும் 4'' G.I Pipe உடைப்பு ஏற்பட்டுள்ளது.
8. பீச் 1ம் நம்பர் பகுதியில் சப்ளை லைனில் end cup-ஐ அறுத்து சோதனை செய்யவேண்டும்.
9. ஏசுதாஸ் காலனியில் end cup-ஐ அறுத்து சோதனை செய்யவேண்டும்.
10. அந்தோணியார் காலனியில் சப்ளை லைனில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
11. காமராஜ் காலனியில் 3'' pvc சப்ளைலைனில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
12. ஜே.எஸ்.ஆர். Gas agency அருகில் ¾'' air valve லீக் ஆகிறது.
13. புளியமூட்டுகோவில் பக்கம் 2'' pvc சப்ளை லைன் லீக் ஆகிறது.
14. நிஷா ஹோட்டல் பாலையா மார்பில் கடைஅ ருகில் 1 '' pvc சப்ளை லைன்லீக் ஆகிறது.
15. பாலத்தன்கரை சம்ப் அருகில் வி.கே.பி.பம்பிங் மெயின் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
16. இலப்பவிளை திருப்பில் 3'' pvc லைனில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
17. டெம்போ ஸ்டான்ட் அருகில் 4'' pvc லைனில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
18. மாதா காலனியில் சப்ளை லைனில் உடைப்பு எற்பட்டுள்ளது.
19. பள்ளி முக்கில் 3'' pvc supply லைனில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
20. லோபப்ஸ் மண்டபம் அருகில் 5'' pvc supply லைனில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
21. காமராஜர் சாலையில் 2'' supply லைனில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
22. மார்க்கெட் செல்லும் சாலையில் பம்பிங் லைன் உடைப்பு ஏற்பட்டுள்ளது.

23. வெள்ளிப்பிள்ளையார் கோவில் அருகில் சுனாமி டேங்க் செல்லும் பம்பிங் லைன் 2 இடங்களில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
24. களிமாரில் பத்மநாபா ஆஸ்பத்திரி அருகில் 3'' supply லைனில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
25. சிஎம்சி காலனி அருகில் விகேபி பம்பிங் மெயினில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
26. கேடிசிசி பேங்க் அருகில் 6'' pumping லைனில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
27. பள்ளி ரோடில் 5'' supply லைனில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
28. சிஎம்சி காலனியில் 1ம்எண் வீட்டின் முன்னால் 2'' supply லைனில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
29. மாதா காலனியில் நாராயணசாமி கோவில் அருகில் 2'' pvc supply லைனில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
30. குளச்சல்கடை பகுதியில் 3'' pvc லைனில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
31. கொட்டில்பாட்டில் பொதுக்குழாய் உடைப்பு எற்பட்டுள்ளது.
32. தெற்கு கள்ளிகடப்பில் 1/90ஏ வீட்டின் முன்னால் பொதுக்குழாய் உடைப்பு ஏற்பட்டுள்ளது/
33. கேஎஸ்எஸ்எஸ் காலனி, காரிதாஸ் காலனி, சிங்காரவேலர் காலனி ஆகிய பகுதிகளில் பம்பிங் லைனில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
34. களிமாரில் பொதுக்குழாய் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
35. அலுவலகத்தில் 2 இடங்களில் 1'' pvc லைனில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
36. பீச் டேங்க் செல்லும் 4'' pvc லைனில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
37. செட்டிவிளையில் 3'' pvc supply லைனில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.
38. செட்டிவிளையில் 5'' sluice valve leak ஏற்பட்டுள்ளது.
39. காந்தி ஜங்சனில் 4'' pvc லைனில் உடைப்பு ஏற்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட உடைப்புகள் அனைத்தையும் சரிசெய்வதற்கும் இதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.66000/–க்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மான எண்.380.** அலுவலகக்குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

நகராட்சி மன்ற தலைவர்
குளச்சல் நகராட்சி